# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்

குடில் : 1

விருந்து : 3



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

15.11.2018

நற்றமிழ்க்குடில்

| | | |
|---|---|---|
| ஆசிரியர்கள் | : | கு.பாரதி |
| | | முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு |
| | | வே. குணசேகரி |
| | | இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு |
| இணையாசிரியர்கள் | : | மு.துர்கா |
| | | முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு |
| | | அ. ஸ்டெல்லாமேரி, அ. பர்ஸானா |
| | | ஆ. வள்ளி |
| | | இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு |
| துணையாசிரியர்கள் | : | மு. சத்யா |
| | | முதுகலைத் தமிழ் முதலாமாண்டு |
| | | சா. யோகேஸ்வரி, |
| | | அ. உமா மகேஸ்வரி |
| | | இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு |
| ஆலோசனைக் குழு | : | டாக்டர் சேதுகுமணன் |
| | | கல்லூரித் தலைவர் |
| | | முனைவர் ம. சம்ஷாத் |
| | | கல்லூரி முதல்வர் |
| | | பேராசிரியர் சே. கண்மணி |
| | | தமிழ்த்துறைத் தலைவர் |

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்


வெளியீடு : சோகா தமிழ்ப்பேரவை

நாள் : 15.11. 2018

## உள்ளே....


தலையங்கம்

கவிதைச் சாரல்

நூலறிவோம்

விடுகதை

சித்திரச் சிறுகதை

தோழிக்குக் கடிதம்

சொல்லோடு விளையாடு

அறிவோம் அறிஞர்களை

மலரே

துறை நிகழ்வுகள்

## தலையங்கம்

# எது பெண் சுதந்திரம்?



இருபத்தியோராம் நூற்றாண்டின் நவ நாகரிகத்தின் உச்சத்தை எட்டிக்கொண்டிருக்கும் இச்சமுதாயத்தில் பெண்கள் முழுமையான சுதந்திரத்தையும், முன்னேற்றத்தையும் அடைந்து விட்டதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் அப்படி நிகழவில்லை. கல்வி கற்பதும் பணிக்குச் செல்வதும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதும் பெண்களுக்கு உரிய முன்னேற்றங்கள்தான். என்றாலும் உளவியல் அடிப்படையிலும் உடலியல் அடிப்படையிலும் இன்றும் பெண்கள் சமுதாயத்தினரால் ஒடுக்கப்படுகின்றனர்.

இன்றைய சமூகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் பெருகிக்கொண்டேதான் வருகிறது. பிறந்து மூன்று வயதுகூட நிரம்பாத சின்னஞ்சிறு குழந்தைகளைக்கூட துடிக்கத் துடிக்க நாசம் செய்யும் கொடும்பாவிகளின் கூட்டம் நம் சமூகத்தில் பெருகி வருகின்றது. வயதான முதியவர்களையும் இக்கூட்டம் விட்டு வைப்பதில்லை.

கல்வி கற்றால் வாழ்க்கையின் நிலையுயரும் எனக் கனவுகளோடு கல்லூரிக்குச் செல்லும் இளம்பெண்களுக்கும் இத்தகைய இழிநிலைதான். பேருந்தில், மின்தொடர் வண்டியில், அலுவலகத்தில், ஏன் மின்தூக்கியில் கூடப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர். பாலியல் வன்கொடுமை என்பது பெண்களின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாகச் சமுதாயத்தின் மிகப்பெரியச் சீர்கேடாகத் தீர்க்க முடியாத சிக்கலாக உருவெடுத்து வருகிறது. இதுதான் பெண் சுதந்திரத்தின் வளர்ச்சியா?

இந்நிலை மாற வேண்டுடிமனில் பெண்களைப் போகப் பொருளாக, போதைப்பொருளாகப் பார்க்கின்ற நிலை முற்றிலும் மாறவேண்டும். சிறுகுழந்தைகளைச் சிதைக்கின்ற வஞ்சகங்கொண்ட கயவர்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்க, அச்செல்வங்களை ஈன்றெடுத்த பெற்றோரிடையே விழிப்புணர்வு வேண்டும். பெண் பிள்ளைகளுக்கு மட்டுமே ஒழுக்கத்தை ஓயாமல் சொல்லிக் கொடுக்கும் பெற்றோர் ஆண் குழந்தைகளை வளர்ப்பதிலும் கவனம் கொள்ள வேண்டும். சிறுவயதில் இருந்தே ஆண்பிள்ளைகளுக்குப் பெண்பிள்ளைகள் மீது நல்ல அபிப்பிராயத்தையும் மரியாதையையும் உயர்ந்த எண்ணத்தோடு மதிக்கும் சிந்தையையும் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடன் நண்பர்களைப் போல் பழகுதல் வேண்டும். அப்போதுதான் பெண்பிள்ளைகள் தன்னைச்சுற்றி எது நடந்தாலும் தன் பெற்றோரிடம் தைரியமாக வந்து பேசும்நிலை ஏற்படும். பெண் குழந்தைகளும் தாம்சந்திக்கும் பிரச்சனைகளைப் பெற்றோரிடம் மனம்விட்டுக் பேசவேண்டும். இவையெல்லாம் பாலியல் வன்கொடுமைகளிலிருந்து பெண்பிள்ளைகளைப் பாதுக்ககாக்க அடிப்படைத் தீர்வுகளாகும்.

ஒரு பெண் நன்றாக இருந்தால் ஒரு குடும்பம் நன்றாக இருக்கும். ஒரு குடும்பம் நன்றாக இருந்தால் ஒரு நாடு நன்றாக இருக்கும். ஒரு நாடு நன்றாக இருந்தால் உலகமே நன்றாக இருக்கும். உலகமே நன்றாக இருக்கத் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்தக் கொடுமைகளிலிருந்து பெண்களைப் பாதுக்க வேண்டிய தேவையும் கடமையும் இச்சமுதாயத்தை நோக்கி...

**மு.துர்கா**

**முதுகலை இரண்டாமாண்டு**

## பேனா முனையில் பொன் எழுத்துக்கள் ...

மனதில் அலைமோதும் எண்ணங்களுக்கு
வார்ததைகளாய் வடிவம் தந்து
உயிர் கொடுக்கும் முனை...

மனதின் இன்பத் துன்பங்களை
வானில் உள்ள விண்மீன்களாய்
மின்னிப் பொன் எழுத்துக்களாக
உயிர் கொடுக்கும் முனை...

முடிவல்ல தொடக்கத்தின்
முதல் முனை...
பொன் எழுத்துக்களில்
என் பேனா முனை!!

பா. லட்சுமி

இளங்கலை இரண்டாமாண்டு

## வாழ்க்கைப் பயணம்

அவரவர் வாழ்வில் ஆயிரம் மாற்றம்
வாழ்நாள் கனவைத் தீர்மானிக்கும் மாற்றம்
வாழ்வில் ஒரிருமுறைதான் கிட்டும்
வாய்ப்பைப் பயன்படுத்திப் பயணம்செய்!
செல்லும் பயணத்தில் மாறும் காட்சிகள்...
உனக்கான வாழ்வின் வழியைத் தீர்மானிக்கும்
உன் வாழ்வில் ஏற்படும் நல்ல மாற்றம்!!

வி. காவேரி

இளங்கலை இரண்டாமாண்டு

## ஐம்பூதங்கள்

- நன்செய் புன்செய் எனப் பெயர்பெற்று
  உழவுத் தொழிலை செய்ய வைத்தாய்!
  காலை முதல் மாலைவரை
  உணவிற்காய் உழைக்கும்
  மானிடரைத் தாங்கி...
  பட்டணம், நகரம் கிராமம் என
  பல வகையாய் உருவெடுத்தாய்!
  பாருக்கே உணவளித்த
  பாசமிகு விவசாயிக்கு
  பாரத்தைத் தவிர
  வேறென்ன தந்தாய் நீ?
  நிலமே!!

- காலைக் கதிரொளி
  இயற்கை ஓவியம்
  ஒளிச்சுடராய் ரசிக்கும் அழகு
  தீப்பொறியின் அங்கம்
  வெடிக்கும் எரிமலை
  சிறிய அகல் விளக்கு
  சீறி எரிக்கும் தழல்...
  உணவை உருவாக்க
  உதவும் கரம்...
  நெருப்பு !!

- சூரிய நிலவைச் சுமந்து
சுட்ருகின்ற வானமே!
இரவில் கொட்டிக் கிடக்கும்
விண்மீன்களாய்க் காட்சியளிக்கிறாய்...!
மழைக்கால கருமேகமாய் உருவானாய்
அழகான வானவில்லாய்
நிறம் மாறினாய்...
விழிகள் விரிய வைக்கும்
அதிசய வானம்!!

- உலகம் அனைத்தும்
தனக்கே உடையதுபோல
இங்கும் அங்கும்
ஓடுகின்ற காற்றே...!

நீ புயலாக மாறி குன்றினைக் கூட
தூள் தூளாக மாற்றுவாய்...
பூவிற்குள் கூட
நோகாமல் நுழைந்து செல்வாய்...!
இளம் தென்றலாய் வீசிடும்
இனிமை காற்று!

- மழை பொழியும் துளியாக
மலையில் விழும் அருவியாக
காட்டாற்று வெள்ளமாக
கரைபுரளும் ஆறாக
ஓடுகின்ற ஓடையாக

அலைமோதும் கடலாக
கடலுக்கு நடுவில் அமைதியாக
நன்னீர் உப்புநீர் என்று
அன்றாட வாழ்வின் அங்கமாக
எந்த இயற்கை சூழலும் பெற்றிராத
தண்ணீராம் தன்மையைப் பெற்றாயே...
தாகம் தீர்த்த நீர்!!

**அ. பர்சானா**
**இளங்கலை இரண்டாமாண்டு**

***அம்மா***

அம்மா இல்லை என்றால் இவ்வுலகமே இல்லை
அவள் ஒரு ரகசியப் பெண்
அவள் வயிற்றில் நான் பிறப்பதற்கு முன்பு
நானும் அவளுக்கு ரகசியம்தான்
அம்மாவின் அன்பு எல்ல காண முடியுமா அளவு?
அம்மாவின் கருவறைக்கு இணை உண்டோ?
அம்மா என்ற உறவை விட
சிறந்த உறவு எதுவுமில்லை...
இவ்வுலகத்தில் எத்தனையோ
நேசிக்கவும் இரசிக்கவும் உண்டு...
அவை எனக்கு பெரிதில்லை,
பெருமையுடைய அம்மாவை நேசிப்பேன்!
தொப்புள் கொடியின் மூலம் உருவான உறவை
என்றும் பற்றிக்கொள்வேன் அம்மாவின் உறவை!

**வெ. சுஷ்மிதா**
**இளங்கலை தமிழிலக்கியம்**

# அப்பா

என்னைக் கருவில் சுமக்காத தாய்
கருவில் இருந்து ஈன்றபோது
அன்னைக்கு ஒரு நாள் வலி
ஆனால் உனக்கோ என் எதிர்கால
வாழ்வை எண்ணி ஒவ்வொரு நாளும் வலி!
நான் பஞ்சு மெத்தையில் உறங்கிட
இரவில் கூட உறக்கமின்றி உழைக்கும் நீ
நான் விழித்ததும் பார்க்கத் துடிக்கும்
முகம் நீ தான் உறங்கும் முன் பார்க்கத் துடிக்கும்
பார்க்க துடிக்கும் முகமும் நீ தானே
உன்னைக் காணாத நாட்களில் வாழ்வே
முடிந்ததாய் உணர்கிறேன்.
இனியும் என்னைப் பிரியாதே அப்பா!!

**சே. ஜெயஸ்ரீ**
**இளங்கலை இரண்டாமாண்டு**

**விடுகதை விடைகள்**

1. மீன்வலை
2. ஆபத்து
3. கண்கள்
4. நிலா
5. மூச்சு
6. நீர்
7. பட்டுத்துணி
8. பழனி
9. கண்மணி
10. பட்டு

தோழிக்குக் கடிதம்

அன்புள்ள தோழிக்கு

நான் இங்கு நலம்இ நீ அங்கு நலமா? வீட்டில் இருக்கும் அனைவரும் நலமா? இன்று நான் கல்லூரிக்குச் செல்லும்போது நடந்த நிகழ்வை உன்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்று பேருந்தில் நான் பயணித்துக்கொண்டிருக்கும் வேளையில் பெண் ஒருவர் தன்னுடைய கைபேசியைப் பயன் படுத்தியவாறே பேருந்தில் ஏறினார். பின் பேருந்திலும் கைபேசியை பயன்படுத்திக் கொண்டே இருந்தார். நடத்துனர் அவர் அருகே வந்து பயணச்சீட்டு பெற்றுக்கொள்ளுமாறு அழைத்தபோதும் அப்பெண்மணி கைபேசியில் மும்முரமாய் மூழ்கி இருந்தார். பக்கத்தில் அமர்ந்திருந்த என் கல்லூரி சகோதரி அழைத்த பின்னே அவர் நடத்துனரைக் கவனித்துப் பின் பயணச்சீட்டினைப் பெற்றுக் கொண்டார். மறுபடியும் அவரது கண்களும் கவனமும் கைபேசியிலேயே மூழ்கியது.

அவரது அத்தகைய செயல், நடத்துனரிடம் சிறுமுனகலை ஏற்படுத்தியதோடு பிற பயணிகளும் அவரை உற்று நோக்கி முகம் சுளிக்கச் செய்தது. அவர் இறங்குவதற்கான இடம்வரும் வரையிலும் அவரது அச்செயலில் மாற்றம் இல்லை. அவர் பேருந்திலிருந்து இறங்கி வீட்டை நோக்கி நடை போடுகையிலும் அது தொடர்ந்தது.

அப்பெண்மணி பேருந்திலிருந்து இறங்கிய அடுத்த கணமே அவரின் நடவடிக்கையைப் பேருந்தில் இருந்த சிலரது வாய் அசை போட ஆரம்பித்தது. கையில் கைபேசி இருந்தால் உலகமும் மறந்து போகிறது.... பயணச்சீட்டுப் பெற வேண்டும் என்பதையே மறந்துவிட வேண்டியது என நட்ததுனரும் தனது ஆதங்கத்தைக் கொட்டினார்.

அப்பெண்மணியின் செய்கை அவரின்மேல் ஒரு எதிர்மறையான எண்ணத்தை ஏற்படுத்திவிட்டது. பின் நானும் என் தோழியும் அடுத்த பேருந்து நிறுத்தத்தில் இறங்கினோம். அப்பொழுது என் தோழியும் அப்பெண்மணி குறித்தே பேசினாள்....

அப்பெண்மணி அரசுப்பணித் தேர்வு சார்ந்த வினாக்களைப் படித்து வந்ததாகவும், அது தெரியாது பேருந்தில் உள்ளவர்கள் அவரைத் தவறாகக் கருதியதையும் எண்ணி வருந்தினாள். அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி அழிவிற்கு மட்டுமே பயன்படுகின்றது என்ற எண்ணம் நம்மில் பலருக்கு உண்டு. ஆனால் ஆக்கத்திற்கும் பயன் படுகின்றது என்ற எண்ணம் ஏனோ பலருக்கும் எழவே இல்லை என்று என் தோழி கூறினாள்.

என்னதான் இருந்தாலும் கைப்பேசி உலக அறிவை வளர்த்துக் கொள்ளப் பயன்படுவதாயினும் அதனைத் தகுந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதே என்னுடைய கருத்து. கைபேசியால் நாம் உடல்சார்ந்த பிரச்சனைகளைச் சந்திப்பதோடு மனம்சார்ந்த பல பிரச்சனைகளையும் சந்திக்க நேரும் என்பதைப் பலரும் அறிவது இல்லை. அதனை ஓயாமல் பயன்படுத்துவதை நவநாகரிகமாக கருதுகின்றனர் இன்றைய தலை முறையினர். அதற்குக் காரணம் கைபேசிக் குறித்த புரிதல் அவர்களுக்கு இல்லை என்பதே.

கைபேசியினை பிள்ளைகளுக்கு வாங்கிக்கொடுக்கும் பெற்றோர் அதன் நன்மைஇ தீமை என்ன என்பதையும் அதன் அவசியத்தையும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்துதல் வேண்டும். அதுமட்டுமில்லாமல் பிள்ளைகள் எதற்காகவெல்லாம் கைபேசியைப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் அவ்வப்போது கண்காணித்தல் வேண்டும். அது பதின்பருவ பிள்ளைகள் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளைத் தவிர்க்க வழிவகை செய்யும். என் உணர்வை உன்னுடன் பகிர்ந்துகொள்ள ஆவல் கொண்டே இக்கடிதத்தை எழுதினேன். உன் கருத்தை எதிர்நோக்கும் உன் தோழி.........

உன் அன்பிற்குரிய தோழி

வே. குணசேகரி
இளங்கலைத் தமிழிலக்கியம்

1. தன் மேனி முழுதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்?
2. முதலெழுத்துத் தமிழின் அடுத்த எழுத்து, கடை மூன்று சேர்ந்தால் ஒரு எண்ணிக்கை, மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கை தேவை அது என்ன?
3. பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது அது என்ன?
4. அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி, பாதிநாள் குறைவாள், பாதிநாள் வளர்வாள் அவள் யார்?
5. ஆலமரம் தூங்க அவனியெல்லாம் துங்க சீரங்கம் தூங்க, திருபாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?
6. அள்ளமுடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன?
7. கடைசி வார்த்தையில் மானம் உண்டு முதல் வார்த்தையில் மென்மைக்காக இறந்தன பூச்சிகள், காஞ்சியின் நான் யார்?
8. கடையெழுத்து மாறிடில் தின்னலாம், முதலும் கடையும் சேர்ந்தால் குளிரும், மொத்தத்தில் முருகன் இடம், தெரிந்தவர்கள் சொல்லுங்கள் இங்கே?
9. முதல் இரண்டை இழந்தால் ஒளியில்லை. கடையிரண்டை ஐந்தறிவு ஜீவனுக்கு கட்டுவது யார்? இரண்டும் மூன்றும் திரும்பினால் கடைசியில் நாமும் அதுவே. முதலும் கடையும் சேர்ந்தால் கை இழந்த பெண். மொத்தத்தில் அழகிய பெயராகவும் இருக்கும் அது என்ன?
10. நடுவழிய ஓய்வுக்காம். கடையிரண்டில் ஏதுமில்லை சொல். முன்றெழுத்தில் உடுத்தலாம். மொத்தத்தில் பெண்களின் விருப்பம் அது என்ன?

# நூல் அறிவோம்



நூலின் பெயர்: "கொடிமரத்தின் வேர்கள்"

ஆசிரியர்: கவிஞர் வைரமுத்து

"முத்துச் சிப்பிக்குள் நட்சத்திரங்கள் மாதிரி
கவிதையின் உள்ளடக்கத்தில்
சிலசோதனை முயற்சிகள்"

என்பதற்கிணங்க கொடிமரத்தின் வேர்கள் பல அரிய சோதனை முயற்சிகள் கையாளப்பட்டு வைரமுத்து அவர்களின் வைரமுத்து வரிகளால் உருவாக்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

நூலின் தொடக்கத்தில் கவிஞரிடம் கேட்கும் கேள்விகளுக்கு **ஒரு நிரபராதி விசாரிக்கப்படுகிறான்** என்ற தலைப்பில் கவிச்சிந்தையாலே கவிப்பேரரசின் பதில்கள் பதிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

இவருடைய கவிதைக் தக்க தருணத்தின் நிகழ்வுகளைக கண்முன் நிறுத்தும் கண்ணாடியாகப் பிரதிபலிக்கின்றன. அதில் ஒரு கவிதை, ஈழப் போராளிக்கு ஒரு காதலியின் கடிதமாக

"கடிதத்தில் அழிவது
மெல்லினமும் வல்லினமும்தான்
கண்ணீரில் அழிவது
தமிழினமே அல்லவா?"

என அமைந்த கவிதைத் தமிழினம் படும்துயரைக் காட்டுகிறது.

செவ்விந்தியா என்ற தலைப்பில் இந்தியாவின் இழிநிலை விவரிக்கப்பட்டள்ளது.. உலகப் படத்தில் நேற்றுவரை இந்தியா நெற்றிப் பொட்டு, இன்று ரத்தச் சொட்டு என்பதும்,

**“காஷ்மீரச் செடிகள்**
**மலர் தயாரிப்பதைமறந்து**
**வெடிகுண்டு பூப்பதோ?**

மான்களின் சரணாலயம் இன்று மனிதர்களின் மரணாலயமாய் மாறி விட்டதோ? என்கிற வரிகளும் ஜனநாயக நாட்டின் அரசியல் போரினை விளக்கிக்காட்டுகின்றன.

என்பதும் அடிமை ஈழத்தில் தம்பதிகளாய் இருப்பதினும் சுதந்திர ஈழத்தில் கல்லறைகளாய் இருப்போம் என்கிறவரிகள் அன்றைய ஈழத்தின் நிலைமையதனை நம் கண் முன் நிறுத்துகின்றன.

உணவு திரிந்தால் இரைப்பையைப் பட்டினிபோடுவேன் தண்ணீரில் கிருமிகளா? தாகத்தைத் தள்ளிவைப்பேன் காற்று திரிந்தால் சுவாசப் பையும் பட்டினிகிடக்குமா? என்ற கவிதைக் காற்று மாசுபாட்டால் அவதியுற்றுக் கிடக்கும் அவல நிலையை வெளிப்படுத்துகின்றது.

**“ எனக்கொரு சந்தேகம்**
**ஆகஸ்டு பதினைந்து**
**சுதந்திரத்தின்**
**பிறந்தநாளா?**
**தேசியத்தின்**
**நினைவு நாளா?”**

என்னும் வரிகள் சுதந்திரம் அடைந்த பிறகும் சுதந்தரம் இல்லாத் போக்கினைத் தெரிவிக்கின்றன. மேலும் இலங்கையில் நடந்த இனப்படுகொலையில் கவிஞரின் பேனாவிலிருந்து வழிந்தரத்தமாக

"காலண்டரில்
இந்த ஆகஸ்ட் பதினைந்தை
அச்சடித்த சிவப்பில்
எனக்கு
இலங்கைத் தமிழனின்
ரத்த நெடி அடிக்கிறது"

என்றும், ரத்தவாய்க்கால் வழிந்து சிவப்பாய் போனது கடல், தமிழர்களைத் தின்றுதின்று நெருப்புக்கு அஜீரணமாம். மனித சமுதாயத்தில் வன்முறைகள் பெருகி விடுவதைத் தனது கவிதையின் மூலம் உரைக்கிறார் வைரமுத்து.

ஊருக்குப் போயிருந்தேன் என்ற தலைப்பில் தன் உறவினர்களைக் கண்டு மகிழும் உள்ளப் பூர்வநெகிழ்ச்சியை "என் உடம்பில் இருக்கும் இரத்தம் தான் புதிது இருதயம் பழசுதான்" என்கிற வரிகளும் "என் கிளைகள் வெளியே விரிந்துவிட்டாலும் என் வேர்கள் வசிப்பது இங்கேதான்" என்ற வரிகளும் வெளிப்படுத்துகின்றன.

உன் தேகம் சுடப்பட்ட பின்னும் சுரம் கொடுக்கிறாய் சுடலை மனிதன் சுரந்தருவானா? என்பது ஒரு புல்லாங்குழலின் பூர்வீகத்தை ஆக்கபூர்வ நயத்துடன் காட்டுகிறது. மேலும், நம்பிக்கை ஊன்றி நட என்ற தலைப்பில் மனிதர்களுக்கு எழுச்சியூட்டும் வகையில் கருத்துக்கள் கவியாக்கம் பெற்றுள்ளன.

"மண்ணின் பொறுமைதான்
மலை
கரியின்பொறுமைதான்
வைரம்
தாயின் பொறுமைதான்
நீ
நான்காண்டுப் பொறுமைதானே
பிப்ரவரியின்
ஒருநாள் உயர்வு?"

இந்த பூமி சிரிப்பவர் சொர்க்கம் அழுபவர் கல்லறை உன் உதடு கல்லறையா? சொர்க்கமா? என்கிற உணர்ச்சி மிக்கவரிகள எழுச்சியை உருப்பெற உதித்தெழச் செய்கின்றன.

ஒருகவிதை நூலில் இத்தனைச் சிறப்புக் கூறுகளும் கருத்துச் செறிவும், சொல்லாட்சியும், கவிநயமும், சமூகச் சிந்தைனைச் செறிவுடன் அமைந்து காணப்படுவது ரசிக்கத்தக்கதும் போற்றி வரவேற்க தக்கதுமாகும்.

இந்நூல் படிப்பவர் எண்ணங்களைச் சிந்திக்க தூண்டிடவும் படைப்பாக்க ஆற்றலை உருவாக்கிடவும் வழி செய்வனவாகவும் அமைகிறது.

கு. பாரதி
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

சிறுகதை

## சிறகொடிந்த பறவை

அமைதியான காலைபொழுது. பறவைகளின் சத்தம் எங்கும் ஒலிக்கிறது. ஊரில் அனைவரும் வேலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பரப்பாக பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்தனர். தீடிரென்று அழுகையின் சத்தம். சத்தம் கேட்டது. ஊர் மக்கள் அனைரும் அன்பு வீட்டை நோக்கி பதறியடித்து ஓடினர். அன்புவின் தந்தை இறந்துவிட்டார் என்ற செய்தி எல்லாருக்கும் அதிர்ச்சியைத் தந்தது.

நேற்றுகூட பாத்தேன். நல்லாதான் என்னிடம் பேசிகிட்டு இருந்தார். திடீர்னு ஏன் இப்படி ஆச்சு?

ஐயோ! நல்ல மனுசன், இந்த பக்கத்தில் இருக்கற யாருக்காவது என்ன பிரச்சனைனாலும் முன்ன நின்னு உதவி செய்வார். இந்த மனுசனுக்கா இப்படி ஒரு முடிவு?

நம்பவே முடியலயே? இந்த ஒத்த மனுசனோட வருமானத்தைத்தான் இந்தக் குடும்பம் நம்பியிருந்தது. மூனு பொம்பளை புள்ளைங்கள வச்சிக்கிட்டு இந்த அம்மா இனி என்ன செய்யப்போறாங்களோ தெரியலயே...? என ஆளாளுக்குப் புலம்பிக் கொண்டிருந்தனர்.

அறிவுமதி, வளர்மதி, அன்புமதி மூவரையும் அனைத்தபடி யாரும் இல்லாத உலகில் தனித்துவிடப்பட்டவளாய் அன்புவின் தாய் கமலம் கலக்கமடைந்தாள். கணவன் இறந்தபிறகு தன்னுடைய மூன்று பெண் குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்க என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றாள்.

கமலம் இயல்பிலேயே கொஞ்சம் நோஞ்சான். அவ்வப்போது உடலுக்கு ஏதாவது ஒன்று வந்து அவளைப் பாடாய்ப்படுத்தும்.

அன்புவின் அப்பா இருந்தவரை அவளுக்குதன் உடல்நிலையைப் பற்றிக்கவலை இல்லாமல் இருந்தது. இப்போது அவள் தன் குழந்தைகளை வளர்ப்பதற்காக ஏதாவது ஒரு வேலைக்குச் போயே ஆக வேண்டும் என் கட்டாயத்தில் இருந்தாள். ஆனால் அவளுக்கு நிரந்தரமான வேலை எதுவும் கிடைக்கவில்லை. அவ்வப்போது அவளுக்குக் கிடைத்த சிறுசிறு வேலைகளைச் செய்து குழந்தைகளின் அரைவயிற்றுக்கு மட்டுமே உணவளிக்க அவளால் முடிந்தது.

அம்மாவின் துன்பத்தை அறிந்துகொண்ட பிள்ளைகள் ஒருநாள்... 'அம்மா நாங்களும் உங்களுடன் வேலைக்கு வருகிறோம்'' என்றனர்.

நான் உயிரோடு இருக்கும் வரை இந்த எண்ணம் உங்களுக்கு வரக்கூடாது. நான் எப்பாடுபட்டாவது உங்களைக்காப்பாத்துவேன். நீங்க எல்லாம் நல்லா படிச்சி நல்ல நெலமைக்கு வந்தா எனக்கு அது போதும் என்று கூறிய கமலம் அன்றைய பொழுதைக் கழிப்பதற்கான வேலையைத் தேடிப் புறப்பட்டாள்.

கணவனைப் பிரிந்த சோகம், பிள்ளைகளைச் சரியாக கவனிக்க முடியாத வறுமை எல்லாம் சேர்ந்து மனதைக் குழப்ப கால்போன போக்கில் நடந்துகொண்டிருந்த கமலம், எதிரில் வேகமாக வரும் லாரியை கவனிக்காமல் நடந்தாள். கண்மண் தெரியாமல் வேகமாய் வந்த லாரி கமலத்தின் மீது மோத சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்து போனாள் அவள்.

திக்குதெரியாத காட்டில்விடப்பட்ட தாயைப் பிரிந்த மானைபோல மூன்று பெண் குழந்தைகளும் தாயை இழந்து தவித்துக்கொண்டிருந்தனர். பெற்றோரை இழந்த நிலையில் உறவினர்கள் பார்த்துக்கொள்ள முடியாமல் அறிவுமதி, வளர்மதி ஆகிய இருவருக்கும் திருமணம் செய்ய முடிவுவெடுத்தனர்.

ஆனால் அறிவுமதியின் வயது 16. வளர்மதியின் வயது 14. இளம் வயதில் திருமணத்தை நடத்தி வைத்த உறவினர்கள் அப்பெண்களைப் பற்றிச் சிறிதும் கவலைபடாமல் அப்படியே விடடுவிட்டனர்.

இருவருக்கும் இளையவளான அன்புக்கு வயது பத்து. தன்னுடைய சகோதரிகள் இருவருக்கும் திருமணம் முடிந்ததால் அன்பு தன் உறவினர் வீட்டில் வசித்து வந்தாள். பத்து வயதே ஆன அன்பு, அவர்கள் வீட்டில் கூலியில்லா வேலையாளாய் வாழ்ந்து வந்தாள். ஒரு வேளை சாப்பாடுகூட அந்த வீட்டில் அவளுக்கு ஒழுங்காகக் கிடைத்ததில்லை. ஆனால் வீட்டில் உள்ள வேலைகள் அத்தனையும் அவள் தலையில் கட்டிவிட்டு அங்கிருந்தவர்கள் சொகுசாக வாழத்தொடங்கினர். அத்தனை வேலையையும் செய்து முடித்தால்தான் அவளுக்குச் சாப்பாடு கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் உணவுகூட அவர்கள் சாப்பிட்டு மிஞ்சியது... அவர்களுக்கு வேண்டாதது.... என்பதாகத்தான் இருக்கும்.

இந்த வாழ்க்கை அன்புக்கு மிகவும் துன்பத்தைத் தந்தது. தன் அக்காக்களின் வீட்டிற்குச் சென்றாலாவது தன் வாழ்க்கைநிலையில் ஏதாவது மாற்றம் கிடைக்குமோ என்று ஏங்கினாள். ஆனால் அந்த வீட்டிலிருந்து எப்படிக் கிளம்புவது எனத் தெரியாமல் தவித்தாள். ஒருநாள் அவளுடைய மூத்த சகோதரியான அறிவு உறவினரின் வீட்டிற்கு வந்து அவளைத் தன்வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

அக்காவின் வீட்டிற்குச் சென்றதும் தன் வாழ்க்கையில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் என்று மகிழ்ச்வியோடு சென்ற அன்பிற்கு அங்கும் ஏமாற்றமே காத்திருந்தது. உறவினரின் வீட்டிலிருந்த வேலையை விட பல மடங்கு வேலை அக்காவின் வீட்டில் அவளுக்காகக் காத்துக்கிடந்தது. அறிவு தன் தங்கையை எப்போதும் திட்டிக் கொண்டே

இருப்பாள். அன்பு தன்னுடைய தங்கைதான் என்றுகூட பார்க்காமல் பாசமற்று நடந்துகொண்டாள். பற்றாக்குறைக்கு அறிவுமதியின் கிழட்டு மாமனார் வேறு அவளிடம் தவறான நோக்கத்தில் நடந்துகொள்ள முயற்சித்தார்.

இந்த நரகத்திலிருந்து எப்போது தப்புவோம் என்று நினைத்த அன்பு ஒருநாள் அறிவுமதிக்குத் தெரயாமல் சின்ன அக்கா வளர்மதியின் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். வளர்மதியோ ஆதரவற்று வந்து நிற்கும் தன் தங்கையை ஏறெடுத்தும் பார்க்காமல், அவள் கையில் 50 ரூபாயைத் திணித்து, இனி இங்கே வராதே என்று சொல்லி அனுப்பிவிட்டாள். அக்காவிடம் பாசத்தை எதிர்பார்த்துச் சென்ற அன்புவின் இதயம் சுக்கு நூறாய் உடைந்தது. தாயும் தந்தையும் இழந்த நிலையில் தன் சகோதரிகள் இருவரும் தாயாக இருப்பார்கள் என்று எண்ணிய அன்புக்கு ஏமாற்றமே கிடைத்தது.

என்ன செய்வது? எங்கு செல்வது? என்று தெரியாமல் ரோட்டோரமாக நடந்துசென்ற அன்புவின் மனதில் ஏதேதோ எண்ணங்கள் ஓடின. இந்த துன்பமான வாழ்க்கையை வாழ்வதற்காக இந்த உயிரை வைத்துக்கொண்டு உயிரோடு இருப்பதைவிட தற்கொலை செய்து கொண்டு செத்துப்போவதே மேல் என்ற எண்ணம் அவளுக்குள் எழுந்தது. என்னைத் தவிக்கவிட்டுச் என் அம்மாவும் அப்பாவும் போய்விட்டார்கள். அவர்கள் போன இடத்திற்கே நானும் போகிறேன் என்று அன்பு தனக்குத் தானே புலம்பிக்கொண்டாள.

சிறகொடிந்த பறவையாய்ச் செல்லும் திசைதெரியாமல் நட்டநடுவீதியில் கண்ணீர் வழிய நின்றாள் அன்பு. அப்போது அந்த வழியாக வந்த முத்து என்ற 12 வயது நிரம்பிய சிறுமி ஒருத்தி அவள் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்து அவள் அருகில் வந்தாள். அந்தச்சிறுமி தன்னை நோக்கி வருவதைக்கூட உணராமல் அன்பு அழுதுகொண்டே இருந்தாள். அன்பிற்கு அருகில் வந்த சிறுமி

அவளுடைய நிலைமையை விசாரித்து அறிந்துகொண்டாள், அன்புவின் துன்பத்தை தன்னுடைய துன்பமாக உணர்ந்தாள் அவள். அழாதே என்று அவளைச் சமாதனப்படுத்தித் தான் வசிக்கிற கருணை இல்லத்திற்கு அழைத்துச் சென்றாள். வருத்ததுடன் இருந்த தோழியை முத்து அன்னைபோல் அரவணைத்துக் கொண்டாள். இருவரும் தங்களுடைய இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்..

தன் உடன்பிறப்புகளிடம் இருந்து கிடைக்காத பாசம் அன்பிற்குத் தன் தோழியான முத்திடம் இருந்து கிடைத்தது. முத்துவிற்கும் அவள் குடும்பத்தினரிடமிருந்து கிடைக்காதப் பாசம் அன்பிடம் இருந்து கிடைத்தது. அதன்பின் முத்துவும் அன்புவும் இணைபிரியாத தோழிகளாய் காப்பகத்தில் இருந்துகொண்டு தங்களுக்குக் கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும்.

ரூபிணி.
மூன்றாமாண்டு தமிழிலக்கியம்

### ❖ தெரிந்துகொள்வோம் ...

இலக்கியத்திற்கு அளிக்கப்படும் உயரிய விருதான சாகித்ய அகாடமி விருது தமிழில் மூத்த எழுத்தாளர் **எஸ்.ராமகிருஷ்ணன்** அவர்களுக்கு 2014-ஆம் ஆண்டு வெளியான சஞ்சாரம் என்ற புத்தகத்திற்குக் கிடைத்துள்ளது

## சொல்லோடு விளையாடு...

**இன்தமிழ்ச் சொல் நூறு... இதில் ஒளிந்திருக்கும் சொல் கூறு!**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ப | மி | ற் | சி | தி | டு | வி | ன | க |
| மா | வி | கை | தொ | த் | வி | த | உ | ம் |
| ஆ | ண | தி | மா | ண | பு | த் | மு | ய |
| உ | சி | வ | லா | ம் | ண | ட் | ட் | க |
| தே | தொ | ரி | ரு | ப | வி | ருந் | மா | க |
| ர் | ன | ர | ய | பி | தெ | ய | ஆ | ழ் |
| வு | ம் | லி | மே | ர் | சி | க | ட் | வா |
| த | ணு | சி | பூா | மே | யா | த் | பு | மா |
| மா | ஞ | வு | ரு | சை | ண | பூா | த | ணா |


குறிப்பு

ஒளிந்திருக்கும் சொற்களைக் கண்டறிவோர் அடுத்த இதழுக்கு அவற்றைத் தரலாம். மிகுதியான சொற்களைத் தந்தவருடைய விடைகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

**அக்டோபர் மாத சொல்விளையாட்டுக்கான விடைகள்:**

1. ஓடிப்பிடித்தல்
2. பேய்ப்பந்து
3. கல்லாமண்ணா
4. கல்லுக்குச்சி
5. கரகரவண்டி
6. உப்புவிற்றல்
7. வில்லுக்குச்சி
8. ஊதல்

வெ. வேதவள்ளி
இளங்கலை மூன்றாமாண்டு



## அறிவோம் அறிஞர்களை ...

## திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்

**திரு.வி.க.**, அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளில் ஈடுபாடு கொண்டவர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படுகிறார். செங்கல்பட்டு மாவட்டத்தில் துள்ளம் என்னும் சிற்றூரில் விருத்தாச்சல முதலியார் - சின்னம்மா தம்பதிகளுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார்.

தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னை இராயப்பேட்டையில் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். 1894 லில் வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கும்போது ஒரு காலும் ஒரு கையும் முடங்கின. எனவே பள்ளிப் படிப்புச் சிறிது காலம் தடைப்பட்டது. 1904 ஆண்டில் படிவத் தேர்வு எழுதமடியாமல் போகவே அதோடு பள்ளிப் படிப்பு முடிந்தது. வெஸ்லி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழப்பாணம் நா. கதிர்வேற்பிள்ளை என்ற தமிழறிஞரிடம் தமிழ் நூல்களை முறையாகப் படிக்கத் தொடங்கினார். சிறிது காலத்திற்குப் பிறகு ஆசிரியர் பணியையும் செய்தார். தேசபக்தன, திராவிடன், நவ சக்தி போன்ற பத்திரிக்கைகளில் என்ற ஆண்டுகள் ஆசிரியராக இருந்து நாட்டு விடுதலைக்க்காகத் தொண்டாற்றினார்.

பெண்ணின் பெருமை, நாயன்மார் வரலாறு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெரியபுராணம் குறிப்பும் வசனமும், தேசப்பக்தாமிர்தம், இந்தியாவும் விடுதலையும் முருகன் அல்லது அழகு ஆகியன இவரின் படைப்புகளில் குறிப்பிடத் தக்கன.

**ஜான்சி**
**இளங்கலை மூன்றாமாண்டு**



## மலரே...

குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறிப்பிடும் 99 மலர்களில் ஒன்று நொச்சி மலர். சங்க இலக்கியங்களில் நொச்சி மலர் பற்றிக் கபிலர் குறிப்பிடப்பட்டுள்ளது.. நொச்சியில் கருநொச்சி, நீலநொச்சி, நீர்நொச்சி, மயிலடி நொச்சி ஆகிய பல வகைகள் உள்ளன. நொச்சி என்னும் சொல்லை மதிலைக குறிக்கும் சொல்லாக பயன்பட்டது. அக்காலத்தில் நொச்சிப்பூவைச் சூடிப் போர்முனையில் மதிலைத் தாக்கும் நிகழ்வைக்குறிக்கும் திணை நொச்சித்திணை என வகுத்தார் தொல்காப்பியர். இது ஆற்றோரங்களில் வளரக் கூடிய மரமாகும். இந்த நொச்சி மார்களை வெட்டிப் படல் கட்டி வீடுகளுக்கு வேலியமைத்துக் கொள்ளவர். நொச்சி இலை நிறைய மருத்துவகுணம் நிறைந்துள்ளது. இவ்விலைகளைப் பயன்படுத்திக் கொசுக்களை விரட்டலாம்.

**ஆ. வர்ஷினி உமையாள்**
**இளங்கலை மூன்றாமாண்டு**

# தமிழ்த்துறை நிகழ்வுகள்

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறையில் ஒவ்வொரு மாதமும் ஆய்வரங்கம் நடைபெற்றுவருகிறது. இவ்வரங்கில் தமிழ்த்துறை மாணவிகள் தங்கள் ஆய்வுக் கட்டுரையினை வழங்குவார்கள். அக்டோபர் மாதத்திற்கான ஆய்வரங்கம் 15.10.2018 அன்று பல்நோக்குப் பார்வையில் தமிழ் இலக்கியங்கள் என்ற பொருண்மையில் நடைபெற்றது. தமிழ்த்துறையின் உதவிப்பேராசிரியர் ஏ.கீதா அவர்கள் ஆய்வரங்கத்திற்குத் தலைமைதாங்கியும் கட்டுரை வழங்கியும் சிறப்பித்தார்கள். முதுகலை இரண்டாமாண்டு பயிலும் கு. சரண்யா, கோ. இந்துமதி, ஜெ.முத்தம்மாள் ஆகியோர் கட்டுரை வாசித்தார்கள். தமிழ்த்துறைத் தலைவர் சே. கண்மணி, தமிழ்த்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணக்கியர் கலந்துகொண்டு ஆய்வரங்கத்தைச் சிறப்பித்தார்கள்.

ஆய்வரங்கத்தின் சிறப்பம்சமாக அக்டோபர் மாதத்திற்கான நற்றமிழ்குடில் இதழ் வெளியிடப்பட்டது. இதனை நற்றமிழ்க்குடில் ஆசிரியர்க்குழு வெளியிட தமிழ்த்துறைத் தலைவர் சே.கண்மணி அவர்களும், உதவிப்பேராசிரியர் ஏ.கீதா அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்.

மு. சத்யா
முதுகலை முதலாமாண்டு

நற்றமிழக்குடில் அக்டோபர் மாத வெளியீடு



ஆய்வரங்கம்









